# அரசமைப்புச் (நூற்றி நான்காம் திருத்தம்) சட்டம், 2019

[2020, ஜனவரி 21]

இந்திய அரசமைப்பை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் எழுபதாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (*1*) இந்தச் சட்டம், அரசமைப்புச் (நூற்றி நான்காம் திருத்தம்) சட்டம், 2019 என்று வழங்கப்பெறும்.

(*2*) இது, 2020, ஜனவரி 25 ஆம் நாளன்று செல்லாற்றல் பெறும்.

334 ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

2. அரசமைப்பின் 334 ஆம் உறுப்பில், –

(அ) ஓரத் தலைப்பிற்கு பதிலாக, பின்வரும் ஓரத் தலைப்பு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''பதவியிடங்களை ஒதுக்கீடு செய்தலும் தனியுறு சார்பாற்றம் அளித்தலும் குறித்தசில காலஅளவிற்குப் பின்பு அற்றுப்போதல் '' ;

(ஆ) நீண்ட வரியில், (அ) மற்றும் (ஆ) ஆகிய கூறுகளுக்குப் பின்பு, ''எழுபது ஆண்டுகள்'' என்ற சொற்களுக்கு பதிலாக, ''(அ) கூறைப் பொறுத்தமட்டில் எண்பது ஆண்டுகள் மற்றும் (ஆ) கூறைப் பொறுத்தமட்டில் எழுபது ஆண்டுகள்'' என்ற சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.